# 01-01-2025 செய்தி

## இந்திய–பசிபிக் பிராந்தியத்தின் எதிர்காலத் தேவைகளுக்கு ஒன்றிணைந்து பணி

**'க்வாட்' கூட்டமைப்பு உறுதி**

- 'க்வாட்' கூட்டமைப்பில் இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய 4 நாடுகள் உள்ளன. 2004–ஆம் ஆண்டு இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் சுனாமி மற்றும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

- அப்போது பிராந்தியத்தில் உள்ள மக்களுக்கு சேவையாற்ற இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்தன. தற்போது இந்த நாடுகள் அடங்கிய கூட்டமைப்பு 'க்வாட்' என்றழைக்கப்படுகிறது.

- 2004–ஆம் ஆண்டு ஏற்பட்ட பேரிடரின்போது கோடிக்கணக்கான மக்களுக்கு உதவ 'க்வாட்' நாடுகள் நடவடிக்கை மேற்கொண்டு 40,000–க்கும் மேற்பட்ட அவசர நிலை மீட்பாளர்களை பணியில் ஈடுபடுத்தியது.

- மனிதாபிமான உதவிகள் மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளில் 'க்வாட்' நாடுகள் உறுதியாக உள்ளன. 2024–ஆம் ஆண்டில் இந்திய பசிபிக் பிராந்தியம் முழுவதும் பேரிடர் முன்னேற்பாடுகள் உயிர் காக்கும் நிவாரண நடவடிக்கைகளில் 'க்வாட்' நாடுகள் கூட்டாக உதவின.

- தடையற்ற இந்திய–பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, நிலையான தன்மை, வளமை இருக்க வேண்டும் என்பதே 'க்வாட்' கூட்டமைப்பின் தொலைநோக்குப் பார்வை.

- தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பின் (ஆசியான்) ஒற்றுமையை நிலையாக ஆதரிக்க 'க்வாட்' கூட்டமைப்பு மீண்டும் உறுதி அளிக்கிறது. இந்திய–பசிபிக் பிராந்தியத்தின் எதிர்கால தேவைகளுக்கு ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்பதிலும் 'க்வாட்' கூட்டமைப்பு உறுதியாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.